|| श्रीः ||

ஸ்ரீமதே கோபாலதேஶிக மஹாதேஶிகாய நம:|



## பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீவாஸ ரங்க பரகால முநித்ரயாப்த
லக்ஷ்மாத்ம ரக்ஷண யதித்வ யுகாகமாந்தம்|
ஆசார்ய பக்தி பரிபூதம் அநர்க்கசீலம்
கோபாலதேஶிக முநிம் குருமாச்ரயாம:||

"ஸத் ஸம்ப்ரதாயா"வின் பிரதான ரக்ஷகர்

|| श्रीः ||

# ஸத் ஸம்ப்ரதாயா



# SATH SAMPRADHAYA

'Chitrakootam', 10/14, Vidyalakshmi Street,
Sri Rajeswari Nagar, Selaiyur, Chennai 600 073.
**Phone : 044-22270620**

|| श्रीः ||

# AN APPEAL TO ASTHIKAS

With the blessings & Chief Patronage of His Holiness Paravakkottai Srimad Andavan of Poundarikapuram Andavan Ashram, Srirangam, a Trust namely "SATH SAMPRADHAYA" has been formed with effect from February 11, 2008 with its Registered Office situated at Chitrakootam, 10/14, Vidhyalakshmi Street, Sri Rajeswari Nagar, Selaiyur, Chennai-600 073.

The Trust is embarking on publication of our great Saints, Rishis, Alwars and Acharyas at regular intervals and the immediate object of the Trust is to initiate publication of our sacred rare scripts on Srimad Bhagavatam. These publications are intended to popularize and enlighten the basic tenets of Sri Vaishnava Sampradhaya as per the scriptures and Sri Sukthis of Alwars and Acharyas with a no profit motive.

At present, there are not many publications on Srimad Bhagavatam, which do signify and propagate the Visishtaadvaitha Philosophy as intended by our Acharyas for the lay-man. A few publications which are prevailing now do not emphasize on the Visishtaadvaitha Philosophy and not available in Tamil. To eliminate this lacking, the above "SATH SAMPRADHAYA" has been formed and even prior to its formation, the Trustees had published two books under the benefaction of Poundarikapuram Srimad Andavan Ashram, Srirangam namely Ashtasloki, Pancha Suktas and Thiruvaradhana Kramam which met enthusiastic reception amongst Asthikas.

The proposed Publication of Srimad Bhagavatam consisting of 18,000 slokas with 12 cantos will be published in 12 volumes that would contain the original Text in Sanskrit (Devanagari), Transliteration, Translation and explanatory notes in Tamil. It is likely to take 3 to 4 years to complete this onerous task and the first volume is scheduled to be released during 2009.

The Trust has also got plans to publish the important works of our great Acharyas at regular intervals; say 'One Book on every two Months' and under this scheme, Gadhyathrayam in 3 volumes consisting of Saranagati Gadhyam, Sriranga Gadhyam and Vaikunta Gadhyam which are expected to be released during 2008.

The Prices of Books to be published will be fixed in such manner to suit the purse of even the Lower Middle Class, as these would be heavily subsidized. In order to meet the cost of publications, an initial Corpus Fund is to be formulated to take care of the expenses of eminent authors' honorarium, cost of paper, printing charges etc., from the income derived by way of interest from the deposit of the Corpus Fund.

For mobilizing the Corpus Fund, we solicit the support from all Srivaishnavites & Philanthropists by their liberal donation and those who donate Rs. One Lakh and above will be given a copy of all publications free of cost at their Indian Address.

The donations may please be sent from their bank Account in India in Indian Rupees (not in foreign currency) by crossed Cheque / Draft in favour of "SATH SAMPRADHYA" payable at Chennai (Donations exempted under 80G of Income Tax Act vide letter No. DIT(E) No.2(1656) 07-08 dated 9.4.2008 valid upto 31-03-2009).

**Ever in the service of Bagavat, Bhagavat & Acharyas,**
**"Sath Sampradhaya"**

|| श्रीः ||

# ஆஸ்திகர்களுக்கு ஒரு விண்ணப்பம்

ஸ்ரீரங்கம் பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஆச்ரமத்தின் ஆசார்யபீடத்தை அலங்கரிக்கும் வர்த்தமான பறவாக்கோட்டை ஆண்டவன் ஸ்ரீமத் கோபாலதேசிக மஹாதேசிகனின் அருளாசிகளுடனும் அவரையே முதன்மைப் புரவலராகக் கொண்டும் ஒரு ட்ரஸ்டு "ஸத் சம்ப்ரதாயா" என்ற பெயரில் கடந்த பிப்ரவரி 11, 2008–ல் பதிவு செய்யப்பட்டு, "சித்ரகூடம்", 10/14, வித்யாலக்ஷ்மி தெரு, ஸ்ரீ ராஜேஸ்வரி நகர், சேலையூர், சென்னை – 600 073 என்ற விலாஸத்தில் இயங்கி வருகின்றது.

நம் பாரத தேசத்தின் ரிஷிகள், முனிவர்கள், ஆழ்வார்கள் மற்றும் ஆசார்யர்கள் இயற்றிய புனிதமானதும், அரிய பொக்கிஷமானதுமான நூல்களை எந்தவித லாப நோக்கமும் இல்லாமல் வெளியிடுவதே இந்த ட்ரஸ்டின் முக்கிய நோக்கமாகும். இந்த வரிசையில் முதன்முதலில் ஸ்ரீமத் பாகவதத்தை பாமரமக்களும் எளிதில் புரிந்து கொள்ளும்படி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய பரமாக குறைந்த விலையில் வெளியிட வேண்டும் என்பதே ட்ரஸ்டின் அவா.

தற்சமயம் ஸ்ரீமத் பாகவதத்தை நம் விசிஷ்டாத்வைத சித்தாந்த பரமாக இயம்பும் நூல்கள் எதுவும் இல்லை என்று கூறலாம். ஒரு சில நூல்கள் இருப்பினும் அவைகள் சமஸ்க்ருதத்தில் இருப்பதால் தமிழ் மட்டுமே தெரிந்த பாமரமக்கள் அவைகளை புரிந்து கொள்ள முடிவதில்லை. இக்குறை தீரும்படியாக ஸ்ரீமத் பாகவதத்தின் மூல ஸ்லோகங்களை சமஸ்க்ருதம் மற்றும் தமிழிலும், தமிழில் அர்த்தம், பொழிப்புரை மற்றும் விரிவுரையுடனும் ட்ரஸ்டு வெளியிட உள்ளது. இந்த ட்ரஸ்ட் துவங்கும் முன் இதன் பொறுப்பாளர்கள் "அஷ்டஸ்லோகீ, திருவாராதனக்ரமம், பஞ்ச ஸூக்தங்கள்" போன்ற நூல்களை ஸ்ரீரங்கம் பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஆசிரமத்தின் மூலமாக வெளியிட்டு ஆஸ்திகர்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளனர்.

பதினெட்டாயிரம் ஸ்லோகங்களும் 12 ஸ்கந்தங்களும் உள்ள இந்த ஸ்ரீமத் பாகவதத்தை பன்னிரெண்டு புத்தகங்களாக 3 அல்லது 4 ஆண்டுகளுக்குள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. முதல் பாகம் 2009–ல் வெளியாகும். மேலும், நம் பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை தொடர்ந்து "இரண்டு மாதங்களுக்கு ஒரு புத்தகம்" என்ற ரீதியில் ப்ரசுரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் வரிசையில் முதலில் ஸ்ரீ பகவத் ராமானுஜரின் "கத்ய த்ரயம்" அதாவது சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம் மற்றும் வைகுண்ட கத்யம் என்ற மூன்று நூல்களும் தனித்தனியாக 2008–ல் வெளியிடப்படவுள்ளன.

"ஸத் சம்ப்ரதாயா" வெளியிடப்படவுள்ள அனைத்து பிரசுரங்களும் கீழ் நடுத்தர வர்க்கத்தினரும் வாங்கி வாசித்துப் பயன் பெறும் வகையில் கணிசமான மானியம் வழங்கப்பட்டு அடக்க விலையிலும் மிகக் குறைந்த விலைக்கே நிர்ணயிக்கப்படவுள்ளன. மானியத் தொகை மற்றும் புத்தகங்கள் வெளியிடுவதற்காகும் காகிதம், அச்சகச்செலவு, மற்றும் புத்தகங்களை எழுதும் ஆசிரியர்களுக்கு சன்மானம் முதலிய செலவினங்களை, ஒரு நிதியத் தொகை ஏற்படுத்தி அதை அரசு உடைமை ஆக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக வைப்பதன் மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து எதிர்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட விதத்தில் பிரசுரங்களை ட்ரஸ்டு தொடர்ந்து வெளியிட இத் திட்டத்திற்குத் தேவையான கணிசமான நிதியத் தொகையை திரட்டுவதற்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள் மற்றும் மனிதநேயம்மிக்க அனைவரிடமிருந்தும் தகுந்த ஆதரவையும் தாராளமான நிதி உதவியையும் எதிர்நோக்குகின்றோம். ரூபாய் ஒரு லக்ஷம் அல்லது அதற்கு மேலும் நன்கொடை அளிப்பவர்களுக்கு ட்ரஸ்டின் பிரசுரங்கள் அனைத்தும் ஒரு பிரதி இலவசமாக அவர்களின் இந்திய விலாசத்திற்கு அனுப்பப்படும்.

இந்த விஜ்ஞாபனத்தைக் கண்டு, இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி நிதி உதவி அளிக்க முன்வரும் அனைவரும், "ஸத் சம்ப்ரதாயா" என்ற பெயரில் தங்களின் இந்தியாவில் இருக்கும் வங்கிக் கணக்கிலிருந்து (இந்திய ரூபாயில் மட்டுமே) கோடிட்ட காசோலை/ வரைவோலை மூலமாக சென்னையில் மாற்றத்தக்க விதத்தில் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் நன்கொடைகள் வருமான வரி சட்டத்தின் 80G பிரிவில் விலக்கு (DIT(E) No.2(1656) 07-08 dated 9.4.2008 valid upto 31-03-2009) அளிக்கப்பட்டுள்ளது.

என்றென்றும் பகவத், பாகவத, ஆசார்யர்களின் தொண்டில்,
**"ஸத் சம்ப்ரதாயா"**